# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### இந்திய நிதி அமைச்சின் பேராளர்களது விஜயம்

இந்திய அரசாங்கத்தின் நிதித் துறை அமைச்சின் கீழான நிதிச் செயற்பாட்டு பணிக்குழுவால் (FATF) வழிநடத்தப்படும் பேராளர்கள் குழு ஒன்று, இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஏனைய துறைசார் அமைச்சுகள் ஆகியவற்றின் சிரேஸ்ட அதிகாரிகளுக்கான பயிற்சிகள் மற்றும் ஆளுமை விருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக 2025 செப்டெம்பர் 22 முதல் 24 ஆம் திகதி வரை இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். மத்திய நேரடி வரிகள் வாரியம், மத்திய புலனாய்வு அமைப்பு, நிதி புலனாய்வு பிரிவு மற்றும் FATF ஆகியவற்றின் நிபுணர்கள் உள்ளடங்கிய பேராளர்களே இந்த விஜயத்தில் இணைந்திருந்தனர்.

2. பணச் சலவைக்கு எதிரான செயற்பாடுகளை வலுவாக்கல், பயங்கரவாத நிதியளித்தலை முறியடித்தல், சிறந்த செயற்பாடுகளை பகிர்தல், இவ்விடயங்களில் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பினை மேலும் வலுவாக்குவதற்கான வழிமுறைகளை கண்டறிதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இவ்விஜயத்தின்போது கவனஞ்செலுத்தப்பட்டது.

3. இதன் ஆரம்ப அமர்வுகளில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கௌரவ (டாக்டர்) அனில் ஜயந்த, திறைசேரி செயலாளர் டாக்டர் ஹர்ஷன சூரியப்பெரும, இலங்கை மத்தியவங்கி ஆளுநர் கலாநிதி பி நந்தலால் வீரசிங்கே, சட்டமா அதிபர், பாதுகாப்பு செயலாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் சிரேஸ்ட அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

4. AML/CFT கடப்பாடுகளுடன் இணங்கிச்செல்லல், மெய்நிகர் சொத்து சேவை வழங்குனர்களுக்கான விதிமுறைகள், நிதி நிறுவனங்களுக்கான இணக்க கட்டமைப்புகள், மற்றும் ஏனைய விவகாரங்கள் குறித்த கலந்துரையாடல்கள் மெய்நிகர் மார்க்கமூடாக இவ்வருட முற்பகுதியில் மெற்கொள்ளப்பட்டிருந்த தொடர்ச்சியான அமர்வுகளை அடுத்து இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக, இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல், ஒழுங்குமுறை தயார்நிலையை வலுவாக்கல் மற்றும் உலகளாவிய தரநிர்ணயங்களுடனான சீரமைப்பை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, மேலதிக மெய்நிகர் அமர்வுகள்

மற்றும் இரு தரப்பினரதும் தொடர் விஜயங்கள் ஊடாக இந்த இலக்கிற்கு மேலும் வலுச்சேர்க்கப்படும்.

5. திறன் விருத்தி மற்றும் தொழில்நுட்ப உதவி போன்றவற்றில் இலங்கையுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை இந்த முயற்சி மீண்டும் உறுதிப்படுத்துகின்ற அதேநேரம், வளர்ந்து வரும் சவால்களுக்கு எதிராக பிராந்திய நிதி ஒருமைப்பாடு மற்றும் மீள்தன்மையை வலுப்படுத்துவதற்கான பரந்த முயற்சிக்கும் பங்களிப்பு வழங்குகின்றது.

******

**கொழும்பு**
**25 செப்டெம்பர் 2025**